**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2023 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 04–ஆம், நாள் சனிக்கிழமை**

**இடைநிலை மனு எண்.11/2017**
**இன்**
**அசல் வழக்கு எண்.3/2017**

சந்திரகாந்தி

... மனுதாரர்கள்/வாதி

**.. எதிர் ..**

1.ஏ.விஜயகுமார்

2.எஸ்.சாரதாமணி

3.டி.பாக்யலட்சுமி

4.எம்.கமலவேணி

5.முருகேசன்

6.சுந்தர்ராஜன்

...எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 06.12.2022ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஈஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சந்தானம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களை அழைத்தும் தோன்றாததால் அவர்களை ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்

வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

வழக்கு சொத்திற்கு செல்லும் கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலமும், கிழமேல் 700 அடி நீளமுமாக சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும் தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட தடத்தை மனுதாரர் முழு சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களுக்காக வேறு நபர்களோ எவ்வித இடைஞ்சலோ இடையூறோ செய்திடக்கூடாது என்று தாவா முடியும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2–ன்படி, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரரால் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**

2.1.) மனுதாரர் பிதுராஜித வகையில், மனுதாரரின் தகப்பனார் முத்துசாமியின் தகப்பனாரான செலம்பரசகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 30.08.1961ம் தேதி அன்னூர் சார்பதிவக பாகசாசனப்பத்திர எண்.1655/1961–ன்படி மனுதாரரின் தகப்பனார் செலம்பரகவுண்டர் மகன் முத்துச்சாமியும், முத்துச்சாமியின் இளைய சகோதரர் வேல்முத்துகவுண்டரும் பாகபிரிவினை செய்துகொண்டனர்.

மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி முத்துச்சாமி கவுண்டர், மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரியான வசந்தகோகிலம் ஆகிய மூவரும் கடந்த 03.12.1999 ம் தேதி அன்னூர் சார்பதிவக பாகசாசனப்பத்திர எண்.2594/1999–ன்படி பாகபிரிவினை செய்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். மனுதாரரின் தகப்பானர் முத்துச்சாமிகவுண்டர் காலமானதை பின்னிட்டு அவரது வாரிசுகளான மனுதாரரும், மனுதாரரின் சகோதரி வசந்த கோகிலமும் எண்.3513/2006/அ 4–ன்படி வாரிசு சான்று பெற்றும், கடந்த 31.08.2015 ம் தேதி அன்னூர் சார் பதிவக பாகசாசனப்பத்திர எண்.5945/2015–ன்படி பாகபிரிவினை செய்து அப்பாகப்பிரிவினையில் " பி " பாக சொத்துக்கள் மனுதாரருக்கு தனித்து ஒதுக்கப்பட்டு மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்.

2.2.) கடந்த 01.12.2015 ம் தேதி பத்திர எண்.8392/2015–ன்படி பிழை திருத்தப்பட்டு அதன்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தனித்து ஆண்டு அனுபவித்து வருகிறார். தாவா சொத்தானது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகவும் பிதுராஜிதபடியும் ஆண்டு அனுபவித்து வரும் பாதையானது கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலமும், கிழமேல் 700 அடி நீளமுமாக சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும் தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட தட பாத்தியப்படி மனுதாரர் சொத்துக்களை அடைந்து

மனுதாரரும், மனுதாரரின் முன்னோர்களும் கடந்த 30.11.2016 ம் தேதிவரை எந்த வித இடையூறும், இடைஞ்சலும் இன்றி மனுதாரர் சொத்திற்கு பாதையாக உபயோகித்து வருகிறார். 2, 3, 4 ம் பிரதிவாதிகள் மனுதாரரின் சித்தப்பா வேல்முத்துகவுண்டரின் பாகச்சொத்துக்களை கிரையம் பெற்று பின்னர் தற்போது 1ம் பிரதிவாதி விஜயகுமார் அவர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர். கடந்த 30.11.2016–ல் பிரதிவாதிகள் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட வண்டிப்பாதையை உபயோகிக்க விடாமல் இடைஞ்சலும், இடையூறும் செய்கின்றனர். மேற்படி வண்டிப்பாதையை மறைத்து கம்பிவேலி அமைக்கவும் முற்படுகின்றனர். எனவே வழக்கு சொத்திற்கு செல்லும் வண்டிப்பாதையானது கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலமும், கிழமேல் 700 அடி நீளமுமாக சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும் தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட தட பாத்தியப்படி உள்ள பாதையை மானுதாரர் உபயோகித்து வருவதை பிரதிவாதிகள் தடுக்காதிருக்கும் பொருட்டு, இம்மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:–</u>

1ம் எதிர்மனுதாரர் மனு சங்கதிகளை மறுத்ததுடன் அவர் கடந்த 04.07.2016 ம் தேதி வேலு முத்துகவுண்டரிடமிருந்து சொத்தை கிரையம் பெற்று அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும் 1ம் எதிர்மனுதாரரின் சொத்திற்கு அருகில்

உள்ள சொத்தின் உரிமையாளர் மனுதாரர் என்றும், மனுதாரரின் மனு சொத்தானது க.ச.எண்.253/2 நெ காலைக்கு செல்ல வழித்தடமானது க.ச.எண்.242/1 ஆக தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், க.ச.எண்.242/1 பொது வழிதடமானது 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.என்.242/2, 242/4, 242/5 ஆகிய காலைகள் மேல்கோட்டில் தென்மேற்காக செல்கிறது என்றும், அந்த பொது வழிதடத்தின் வழியாக மேற்படி க.ச.எண்253/2 நெ காலைக்கு மனுதாரர் சென்று வருகிறார் என்றும், மேற்படி வழித்தடமானது மற்ற காலைக்கு பொது வழிதடம் என்றும் மேற்கண்ட சங்கதிகளை மறைத்து மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியபட்ட க.ச.எண்.242/5–ல் உள்ள பூமியில் நடுவே கிழமேலாக மேற்படி மனுதாரருக்கு தட பாத்தியம் உரிமையுள்ளதாக கூறி பொய்யான தகவலுடன் இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்243/7–ல் உள்ள பூமிக்கு செல்ல வழித்தடமானது க.ச.எண்.243/5 என தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழித்தடமானது க.ச.எண்.217 காலையில் கிழமேலாக வந்து மேற்படி காலையில் மேற்கோட்டில் வடக்கு நோக்கி வந்து பின்பு க.ச.எண். 243 காலையில் வடக்கோட்டில் மேற்கே வந்து பின்பு தெற்கு நோக்கி திரும்பி மீண்டும் கிழக்கு நோக்கி செல்லும் பொது வழிதடத்தில் பொது கிணற்றிற்கும் க.ச.எண்.243/7–ல் உள்ள மனுதாரரின் சொத்திற்கும் நாளது தேதிவரை எவ்வித இடையூறும் இன்றி மனுதாரர் சென்று வருகிறார் என்றும்,

மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்கு செல்ல எற்கனவே மாமூல் வழிதடம் (க.ச.எண்.242/1 மற்றும் க.ச.எண்.243/5–ல் ) இருந்து வருகிறது என்றும், அந்த வழித்தடத்தை மறைத்து புதியதாக வேறு வழித்தடம் வேண்டி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் க.ச.எண்.242/1 மற்றும் க.ச.எண்.243/5–ல் உள்ள வழித்தடங்களை உபயோகபடுத்தி சென்று வருவதை 1ம் எதிர்மனுதாரர் எந்த வித இடையூறும் செய்யவில்லை என்றும், தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே பொது வழித்தடம் உள்ளது என்றும், மனுதாரர் மனுவில் பரிகாரம் கோரும் பாதையை பொருத்து முழுமையான விபரங்களான எந்த க.ச.எண்ணில் ஆரம்பித்து எவ்வழியாக சென்று எங்கு முடிகிறது என்பதை கூறவில்லை என்றும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள விவரங்கள் முழுமையாக இல்லை என்றும், மேற்கண்ட விபரங்களை மாதிரி வரைப்படத்திலும் கூறவில்லை என்றும், மனுவிற்கு முகாந்திரம் இல்லை என்றும் மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றும் வேண்டபட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

5) **<u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-</u>**

5.1.) இந்த அசல் வழக்கானது வண்டிப்பாதையை விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா பாதையை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரரால் தொடரப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் முத்துசாமியின் தகப்பனாரான செலம்பரகவுண்டருக்கு பிதுராஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்தை கடந்த 30.08.1961-ல் மனுதாரரின் தகப்பனாரும் செலம்பரகவுண்டரின் மகனுமான முத்துசாமியும் அவரது இளைய சகோதரர் வேல் முத்துகவுண்டரும், பாகபிரிவினை செய்துகொண்டதாகவும் மனுதாரரின் தகப்பனார் முத்துசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை முத்துசாமிகவுண்டரும், மனுதாரர் மற்றும் அவரது சகோதரி வசந்தகோகிலம் ஆகிய மூவரும் 03.12.1999 தேதியில் பாகபிரிவினை செய்துள்ளார்கள். அதற்கு பின்னிட்டு மனுதாரரின் தகப்பனார் முத்துசாமிகவுண்டர் கடந்த 14.10.2004-ல் காலமாகிவிட்டார். அதற்கு பின்னிட்டு மனுதாரரும் அவரது சகோதரி வசந்த கோகிலமும், கடந்த 31.08.2015-ல் பாகபிரிவினை ஆவணம் செய்து கொண்டதில் " பி " பாக சொத்துக்கள் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டு அதில் மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருவதாக மனு பிரமாண வாக்குமூலத்திலிருந்து தெரியவருகிறது. மேற்படி பாகபிரிவினையில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய பிழை திருத்த ஆவணம் கடந்த 01.12.2015-ல் செய்து

அதன்படி மனுதாரர் மனு சொத்தில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருகிறார். மனுதாரருக்கு அதரவாக மனுதாரரின் தகப்பனார் செலம்பரகவுண்டர் மகன் முத்துசாமியும் அவரது இளைய சகோதரர் வேல் முத்துகவுண்டரும் செய்து கொண்ட பாகபிரிவினை ஆவணம் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆகவும் மனுதாரரின் தந்தை முத்துசாமிகவுண்டரும், மனுதாரரும் அவரது சகோதரி வசந்த கோகிலமும் கடந்த 03.12.1999–ல் செய்து கொண்ட பாகபிரிவினை ஆவணம் ம.சா.ஆ.2 ஆகவும், முத்துசாமிகவுண்டர் காலமானதற்கு பின்னிட்டு மனுதாரரும் அவரது சகோதரியும், தங்களுக்குள் கடந்த 31.08.2015–ல் செய்துகொண்ட பாகபிரிவினை ஆவணம் ம.சா.ஆ.3 ஆகவும் மேற்கண்ட பாகபிரிவினை ஆவணத்தில் உள்ள பிழையை திருத்தம் செய்து பிழை திருத்த ஆவணம் ம.சா.ஆ.4 ஆகவும், வில்லங்க சான்றிதழ்கள் ம.சா.ஆ.5 முதல் 7 வரையிலான ஆவணங்கள் ஆகவும், மனுதாரர் பெயரிலுள்ள சிட்டா ம.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.2.) மனு சொத்தானது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பிதுராஜிதபடி, அனுபவித்து வந்ததாகவும், அந்த பாதையானது கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலமும், கிழமேல் 700 அடி நீளமும், சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும், தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட பாதை என்றும் அதனை கடந்த 30.11.2013 தேதிவரை மனுதாரரரின் முன்னோர்களும் மனுதாரரும் எந்த வித இடையூறும் இன்றி அனுபவித்து வந்ததாகவும், 2 முதல் 4

வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சித்தப்பா வேல்முத்துகவுண்டரின் பாகசொத்துக்களை கிரையம் பெற்று தற்போது 1ம் எதிர்மனுதாரர் விஜயகுமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும் 5, 6 எதிர்மனுதாரர்கள் மனு சொத்திற்கு சம்பந்த இல்லாத நபர்கள் என்றும் பிரமாண வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

5.3.) எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்துள்ள எதிர்வாதத்தில் மனுதாரர் சொல்வது போல வண்டிதடம் இல்லை என்றும், மனுதாரரின் மனு சொத்தானது க.ச.எண்.253/2 நெ காலைக்கு செல்ல வழிதடமானது க.ச.எண்.242/1 ஆக தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அது பொது வழிதடம் என்றும், அந்த வழிதடம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.எண்.242/2, 242/4, 242/5 ஆகிய காலைகளில் மேல்கோட்டில் தென்மேற்காக செல்கிறது என்றும், அந்த பொது வழிதடத்தின் வழியாகதான் மேற்படி க.ச.எண்.253/2 நெ காலைக்கு மனுதாரர் சென்று வருவதாக எதிர்மனுதாரர் வாதத்தை முன்வைத்துள்ளார். மனுதாரர் சொல்வது போல 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.242/5–ல் உள்ள பூமியில் நடுவே கிழமேலாக மேற்படி மனுதாரருக்கு தடபாத்திய உரிமை இல்லை என்றும், வாதத்தை முன்வைத்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் அவரது பெயரிலுள்ள கிரைய ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆகவும், பொது வழிதடத்தை காண்பிக்கும் க.ச.எண்.242/1–ன் கணிணி பட்டா எ.ம.சா.ஆ.2 ஆகவும்,

க.ச.எண்.242–ன் புல வரைப்படம் எ.ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரர் மற்றும் அவரது சகோதரியின் பெயரிலுள்ள கணிணி பட்டா எ.ம.சா.ஆ.4 ஆகவும், க.ச.எண்.243–ன் புல வரைப்படம் எ.ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.4.) மனுதாரர் தரப்பில் கோரியுள்ள தாவா பாதையானது மனு பிரமாண வாக்குமூலத்திலும் மனு சொத்து விபரத்திலும் எந்த க.ச. எண்ணில் ஆரம்பித்து எந்த க.ச.எண். வழியாக சென்று எந்த க.ச.எண்ணில் முடிகிறது என்பதை குறிப்பிட்டு கூறப்படவில்லை. மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள மா.சா.ஆ.2 ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில் பி பாக சொத்தில் உள்ள தடப்பாத்தியமானது பொது ஷரா கோவை – சக்தி ரோட்டிலிருந்து பொங்களுருக்கு தெற்கே மேற்கே பிரியும் மாமூல் பொது வண்டி வானாதிகள் செல்லும் தடமானது துரைசாமி நாயக்கர் பூமிக்கும் வடக்கும், சின்னசாமி வகையரா பூமிக்கு தெற்கும், கமலாத்தாள் பூமிக்கு கிழக்கும், நஞ்சப்பகவுண்டர் பூமிக்கு தெற்கும், இவைகளுக்கு இடையில் வருகின்ற மேற்படி தடத்திலும், தொடர்ந்து 217/1பி, 217/1ஏ நெ காலைகளில் வடகோட்டில் கிழமேலாகவும், தொடர்ந்து 243 நெ காலையில் வடகோட்டில் கிழமேலாகவும் தொடர்ந்து தெற்கு நோக்கி தென்வடலாகவும் தொடர்ந்து கிழக்கு நோக்கி கிழமேலாக கிணர் பாகபூமி வரையிலும் மேற்படி 243 நெம்பரில் தென்வடலாக வரும் தடத்திலிருந்து தொடர்ந்து மேற்கு நோக்கி " பி " பாக ஏக்கர் 0.58 சென்ட் பூமிக்கு தென்புரத்தில் கிழமேலாக க.ச.242 நெ காலை வரை

உள்ள தடத்திலும் மற்றும் 243/2 நெ காலைக்கு செல்லும் மாமூல் தடத்திலும் அவரவர் பாகபூமிகளுக்கு வண்டி வானாதிகள் கால்நடை வகையாறாக்கள் ஓட்டி போய் வந்துகொள்ள உள்ளவர்கள். க.ச.242/1 நெ காலையில் செல்லும் மாமூல் வண்டிதடத்திலும் மற்றும் க.ச.எண்.259 நெ காலைக்கு செல்லும் மாமூல் வண்டிதடத்திலும் அனைவரும் வண்டிவாகனாதிகள் ஒட்டிக்கொள்ளும் தட பாத்தியம் சகிதம் என்று குறிப்பிட்டிருப்பதை அறியமுடிகிறது. மேற்கண்ட வழிப்பாதை மனு சொத்தில் குறிப்பிட்டு கூறப்படவில்லை. மனு பிரமாண வாக்குமூலத்தில் வண்டிப்பாதையை கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலலும், கிழமேல் 700 அடி நீளமாக சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும், தென்வடல் 150 அடி நீளமும், கொண்ட தடபாத்தியம் என்று குறிப்பிட்டிருப்பதை அறியமுகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் சொல்வது போல தாவா வண்டிப்பாதையானது எந்த காலை எண்ணில் தொடங்கி எந்த எந்த காலை எண் வழியாக வண்டிப்பாதை சென்று எந்த காலை எண்ணில் முடிவடைகிறது என்பதை குறிப்பிட்டு கூறாததால் மனுதாரர் சொல்வது போல வண்டிப்பாதை உள்ளதா என்பதை அறியமுடியவில்லை.

5.5.) எதிர்மனுதாரர் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ள காலை எண்.242/1−க்கான கணிணி சிட்டாவில் மனுதாரரின் தந்தை முத்துசாமிகவுண்டரின் பெயரும் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. மேலும்

காலை எண்.243/5 ற்கு உள்ள கணிணி சிட்டாவிலும், மனுதாரர் மற்றும் அவரது சகோதரியின் பெயர் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்திருக்கும் வாதமானது ஏற்கனவே பொது வழிதடம் காலை எண்.242/1 மற்றும் 243/5-ல் இருப்பதை மறைத்து இந்த அசல் வழக்கினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்பதாகும், மேலும் மனுதாரர் கோரும் பாதையானது 1ம் எதிர்மனுதாரரின் பூமிக்கு நடுவே செல்வதாகவும், அதில் மனுதாரருக்கு பாதை உரிமை இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சொல்வது போல மனு பாதையானது நிலவியல் ரீதியாக உள்ளதா என்பதை மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலிருந்து அறியமுடியவில்லை. ஏனெனில் எந்த எந்த காலைகள் வழியாக வண்டிப்பாதை செல்கிறது என்பதை மனு சொத்து விபரத்திலும் மனு பிரமாண வாக்கு மூலத்திலும் குறிப்பிட்டு கூறப்படவில்லை. மனுதாரர் சொல்வது போல மனு வண்டிப்பாதை உள்ளதா என்பதை சாட்சிய விசாரணைக்கு பிறகு தான் அறியமுடியும், மனுதாரருக்கு பொது வழிப்பாதை காலை எண்.242/1, 243/5-ல் இருப்பதாகவும், அதில் மனுதாரர் சென்று வருவதை எதிர்மனுதாரர் இடையூறு செய்யவில்லை என்று கூறியிருப்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துககொண்டுள்ளது. மனுதாரரின் மனு சொத்திற்கு செல்ல பாதை இருப்பதால் இம்மனுவினை அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படாது. மனுவின்

தற்போதைய சூழ்நிலையில் மனுவினை அனுமதிக்க முகாந்திரம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்த உத்தரவானது இந்த அசல் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்பட்டதாகும்.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 04.03.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.03.04 16:34:45 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை**
**மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 30.08.1961 | கிரைய ஆவணம் எண்.1655/1961—ன் நகல் |
| 2 | ம.சா.ஆ.2 | 03.12.1999 | பாக சாசன பத்திர எண்.2594/1961—ன் நகல் |
| 3 | ம.சா.ஆ.3 | 31.08.2015 | பாக சாசன பத்திர எண்.5945/2015 நகல் |
| 4 | ம.சா.ஆ.4 | 01.12.2015 | பிழைதிருத்தம் பத்திரம் எண்.8392/2015 |
| 5 | ம.சா.ஆ.5 | 11.08.2016 | 01.01.1961 முதல் 31.12.1966 வரை சொத்து விபரம் |
| 6 | ம.சா.ஆ.6 | 15.09.2016 | 01.01.1967 முதல் 31.12.1986 வரை சொத்து விபரம் |
| 7 | ம.சா.ஆ.7 | 05.12.2016 | கணிணி வில்லங்கச் சான்றிதழ் |
| 8 | ம.சா.ஆ.8 | 05.12.2016 | புல எண்.217/1 ஏ, புல எண்.217/1 பி, புல எண்.217/1 டி, புல எண்.242/5, புல எண்.253/2 ன் நில உரிமை விபரங்கள் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | எ.ம.சா.ஆ.1 | 04.07.2016 | கிரைய பத்திரம் எண்.4549/2016 நகல் |
| 2 | எ.ம.சா.ஆ.2 | 07.01.2017 | க.ச.242/1 க்கான கணிணி நில உரிமை விபரங்கள் சான்றிட்ட நகல் |
| 3 | எ.ம.சா.ஆ.3 | | புல எண்.242 ன் வரைப்படம் |
| 4 | எ.ம.சா.ஆ.4 | 07.01.2017 | புல எண்.243/5 ன் நில உரிமை விபரங்கள் |
| 5 | எ.ம.சா.ஆ.5 | | புல எண்.243 ன் வரைப்படம் |

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.03.04 16:34:53 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.11/2017
இன்
அ.வ.எண்.3/2017
சீரான உத்தரவு
நாள் 04.03.2023
மா.உ.நீ., அவிநாசி